**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. MC - 3/2024**

**Deposition of Witness for Prosecution : P.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மூக்கம்மாள் | Caste | : | |
| Father/Husband Name | : | கருப்பையா | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 12.06.2025**

**குறுக்கு விசாரணை**

எனக்கு எதிர்மனுதாரருக்கும் 04.09.2014 ஆம் தேதியில் திருமணம் நடந்தது. இருவீட்டாரின் சம்மதத்துடன் எங்கள் கல்யாணம் நடந்தது. நான் 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது கணவர் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். திருமணத்திற்கு முன்பு நான் வேலை எதுவும் செய்யவில்லை. நான் எங்கள் திருணமத்தின்போது எனது கணவர் கம்பி கட்டும் வேலை செய்துவந்தார். எனது கணவர் 10 ஆம வகுப்பு வரை படித்துள்ளார் என்பதை தெரிந்துகொண்டுதான் நான் திருமணம் செய்து கொண்டேன். திருமணத்தின்போது எனக்கு 6 பவுன் தங்க நகையும், எனது கணவருக்கு 1 பவுன் செயின் மற்றும் 1/2 பவுன் மோதிரமும் எனது பெற்றோர்கள் போட்டார்கள். எனக்கு 3 பவுனில் ஒரு செயின் மற்றும் 3 பவுனில் நெக்லசும் போட்டார்கள். எனது கணவருக்கு பட்ட வைத்த செயினும், ரோஜா பூ டிசைன் போட்ட மோதிரமும் போட்டார்கள். திருமணம்

முடிந்து நான் எனது கணவரும் அவரது வீட்டில் குடியிருந்தோம். சுமார் 4 மாதங்கள் அங்கு இருந்தோம். பின்னர் தனியாக தனி குடித்தனம் வேறு வீட்டிற்கு சென்றுவிட்டோம். நான் எதிர்மனுதாரரின் தாய் தகப்பனாரை தொந்தரவு செய்து அவர்களை அவர்களது வீட்டில் இருந்தே விரட்டிவிட்டு அவர்கள் தனியாக சென்று வேறு வீட்டில் வசித்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள்தான் என்னை வீட்டைவிட்டு விரட்டிவிட்டார்கள். 25.05.2015 ஆம் தேதியில் எங்களுக்கு முதல் குழந்தை பிறந்தது. நான் திருமணம் முடிந்த பின்னரும் எதிர்மனுதாரர் என்னை விட குறைவாக படித்துள்ளார் என்று சுட்டிகாட்டி அவமானப்படுத்தினேன் என்றால் சரியல்ல. நாங்கள் இருவரும் பிரியும்வரை தனி குடித்தனம்தான் வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் கூலி வேலை பார்த்து குறைவான சம்பளம் கொண்டு வருகிறார் என்றும், அதிக பணம் வேண்டும் என்றும், எதிர்மனுதாரரை நச்சரித்துவந்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு பணம் கேட்டு சண்டைபோட்டு எனது அம்மா வீட்டிற்கு செல்வதை வழக்கமாக வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு செல்லும்போது குழந்தைகளை கணவரிடம் விட்டுவிட்டு சென்றுவிடுவேன் என்றால் சரியல்ல. 2வது குழந்தை 23.02.2018 ஆம் தேதியில் பிறந்தது. முதல் மகன் 6 ஆம் வகுப்பு படித்து வருகிறான். எனது மகன் எதிர்மனுதாரரிடம் உள்ளார். எந்த பள்ளியில் படித்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. எனது 2வது குழந்தை 3 ஆம் வகுப்பு படித்து வருகிறார். அவரும் எதிர்மனுதாரரிடம்தான் உள்ளார். எந்த பள்ளியில் படித்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. என்னிடம் என் குழந்தைகளை எதிர்மனுதாரர் காட்ட மறுக்கிறார். நானும் எதிர்மதாரரும் கடந்த 1 1/2 வருடமாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம். எனது மனுவில் 4வது பக்கத்தில் 7வது பாராவில் " கடந்த

ஜனவரி மாதம் 2024 ஆம் ஆண்டு மனுதாரர் கூலி வேலைக்கு சென்றபோது எதிர்மனுதாரர் மனுதாரரின் ஊருக்கு வந்து இரண்டு குழந்தைகளையும் அழைத்து சென்றுவிட்டார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் விவசாய கூலி வேலைக்கு சென்றபோது, எதிர்மனுதாரர் குழந்தைகளை அழைத்து சென்றுவிட்டார். எனது கணவரை நான் பிரிந்துசென்ற உடன் எனது இரண்டு குழந்தைகளும் எனது கணவர் வசம்தான் இருந்தது என்றால் சரியல்ல. மேற்படி விபரங்களை மேற்படி இரண்டு குழந்தைகளிடம் கேட்டால் தெரியவரும் என்றால் தற்பொழுது எதிர்மனுதாரர் வசம் குழந்தைகள் உள்ளதால் குழந்தைகளின் மனதை எதிர்மனுதாரர் மாற்றியிருப்பார். நான் எனது குழந்தைகளை சுமார் 10 முறை பார்க்க சென்றிருப்பேன். ஆனால் எதிர்மனுதாரரும் அவர்களது பெற்றோர்களும் என்னை குழந்தைகளை பாரக்கவிடாமல் அடித்து விரட்டிவிட்டார்கள். இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது கணவர் எனது வீட்டில் வந்து எனது குழந்தைகளை தூக்கி சென்றபோது புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். ஆனால் காவல் நிலையத்தில் எனது புகாரை விசாரிக்கவில்லை. நான் சொன்னதுபோல் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றாலும், நான் எனது கணவரை பிரிந்து சென்றபோது குழந்தைகளை அவரிடமே விட்டு சென்றுவிட்டேன் என்றாலும் சரியல்ல. எனக்கு கூலி வேலையில் நாள் ஒன்றுக்கு ரூபாய் 200/- கொடுப்பார்கள். நான் தற்பொழுது எனது பெற்றோர் வீட்டில் இருந்து கொண்டு கார்மென்ட்ஸ் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன் என்றாலும் தினமும் ரூபாய் 600/- க்கு குறையாமல் சம்பளம் வாங்கி வருகிறேன் என்றால் சரியல்ல. முத்துகுமார் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவர் எனக்கு மாமா முறை ஆவார். மேற்படி முத்துகுமாரின் வீடு எனது

கணவரின் ஊரில் இரண்டு தெரு தள்ளி உள்ளது. எனது கணவரின் வீட்டில் இருந்து பார்த்தால் மேற்படி முத்துகுமாரின் வீடு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கும் எனது கணவருக்கும் என்ன பிரச்சனை என்றால் எனது கணவருக்கு வேறு ஒருவருடன் தொடர்பு உள்ளது. சம்பளத்தை என்னிடம் கொடுக்கமாட்டார். என்னிடம் வீண் சண்டையிட்டு தொந்தரவு செய்வார். கடந்த 15.03.2017 ஆம் தேதியில் எதிர்மனுதாரர் தனது வழக்கறிஞர் மூலம் சேர்ந்து வாழக்கோரி எனக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதன்பின்னர் நான் எதிர்மனுதாரரிடம் அதிக பணம் கேட்டு தொந்தரவு செய்ததாலும், அடிக்கடி போன் பேசி கொண்டிருந்ததாலும் எனக்கும், எதிர்மனுதாரருக்கும் பிரச்சனை வந்தது என்றால் சரியல்ல. கம்பி கட்டும் வேலையில் பெண்களுக்கு வேலை கிடையாது என்றால் சரியல்ல. கடந்த செப்டம்பர் 2023 சமயத்தில் நான் எனது அலைப்பேசியில் வாட்ஸ்அப் மூலம் வேறு நபரிடம் பேசிகொண்டும், குறுஞ்செய்தி அனுப்பி கொண்டும் இருந்தேன் என்றாலும் அப்போது என்னை கையுங்காலுமாக பிடித்த எதிர்மனுதாரர் அவற்றை எல்லாம் பதிவு செய்து என்னிடம் கேள்விகேட்டபோது நான் எனது கணவரிடம் சண்டைபோட்டுகொண்டு வீட்டைவிட்டு வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி முத்துகுமாரிடம் செல்போனில் பேசிய விபரங்களை எனது சிம்கார்டை வைத்து அலைப்பேசி நிறுவனத்திடம் கேட்டால் நான் பேசிய விபரங்களை தெரிய வரும் என்றால் சரியல்ல. மேற்படி முத்துகுமாருடன் நான் தொடர்பில் இருந்ததை எனது கணவர் எனது பெற்றோரிடம் சொல்லி அவர்களும் வந்து இந்த விசயத்தை வெளியே சொல்லவேண்டாம் என்றும், இருவருக்கும் மனகசப்பு ஏற்பட்டதால் பிரிந்துகொள்கிறோம் என்று எழுதி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. எங்களை வற்புறுத்தி எழுதி வாங்கி கொண்டார்கள்.

அதன்பிறகுதான் எனது கணவர் திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் HMOP No. 87/2024 என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் முத்துகுமாருடன் தொடர்பில் இருந்ததை எதிர்மனுதாரர் கண்டித்தும் நான் கேட்காததால் எதிர்மனுதாரர் மேற்படி விவாகரத்து வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. செப்டம்பர் 2023 முன்பு உள்ள சமயத்தில் எனது கணவர் ஊரில் உள்ள மகளிர் குழுவில் எனது கணவர் பெயரில் கடன் சுமார் 60,000/- பெற்று அதை எனது அம்மாவிற்கு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கடனை கட்டசொல்லி எனது கணவரை நான் வற்புறுத்தியதால் எங்களுக்குள் சண்டை ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றபோது எனது நகை மட்டும் என்னுடன் எடுத்துசென்றுவிட்டேன் என்றால் சரிதான். எனது கணவருக்கு போட்ட செயின் என்னிடம்தான் உள்ளது. மோதிரத்தை எனது தம்பிக்கு செய்முறை செய்துவிட்டேன். மேற்படி முத்துகுமாரிடம் நான் தொடர்பில் உள்ளதை எனது முதல் மகனுக்கு தெரியும் என்றால் எனது மகனின் பிஞ்சு மனதில் நஞ்சை விதைத்துள்ளார்கள். திருமணம் முடிந்து குழந்தை பிறந்து சற்று வளர்ந்த நாள் முதல் எதிர்மனுதாரர்தான் குழந்தைக்கு தேவையான உணவு மற்றும் அனைத்தையும் செய்து வருகிறார் என்றும், நான் வீட்டில் எந்த வேலையும் செய்யாமல் இருந்து வந்தேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் இரண்டு குழந்தைகள் பேரிலும் தபால் நிலையத்தில் மாதம் தோறும் பணம் கட்டி வருகிறார் என்றால் சரிதான். எனது குழந்தையை என்னிடம கொடுக்கசொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் முத்துகுமார் என்பவருடன் தொடர்பில் இருந்தாக எனது கணவர் என்மீது விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த பின்னர்தான் நான் எனது கணவர் மீது அவர் வேறு நபருடன் தொடர்பில் இருக்கிறார் என்று சொல்லி

இந்த ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் எனது கணவருக்கு விவகாரத்து வழக்கில் சமரச பேச்சு வார்த்தை எதுவும் நடக்கவில்லை. சமரச பேச்சு வார்த்தை நடந்த தேதியில் எனது கணவர் விவாகரத்து கேட்டதற்கு நான் ஒப்புக்கொள்ளவில்லை என்றாலும் அன்றைய தேதியில் எனது கணவரின் தங்கை ஜெயலெட்சுமியின் வீட்டிற்கு எனது பெற்றோர் மற்றும் சில நபர்களுடன் சென்று கதவை தட்டி, ஓடுகளை உடைத்து எனது குழந்தையை கேட்டு பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. அன்றைய தேதியில் மேற்படி ஜெயலெட்சுமி காவல் அழைப்பு 100க்கு போன் செய்து போலீசார் சம்பவ இடததிற்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் தொடர்பாக டி. கல்லுப்பட்டி காவல் நிலையத்தில் மனு ரசீது எண் 112/2025 அளிக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது கணவர் மாதம் எவ்வளவு சம்பாதிக்கிறார் என்று எனக்கு தெரியாது. எனது கணவர் மாதம் ரூபாய் 15,000/- சம்பாதிக்கிறார் என்றாலும் அதை வைத்துதான் இரண்டு குழந்தைகளையும் படிக்க வைத்து அவர்களுக்கு தேவையான உணவு உடை மருத்துவ செலவு செய்து வருகிறார் என்றாலும், அவரின் பெற்றோர்களையும் அவர்தான் பராமரித்து வருகிறார் என்றாலும் பிள்ளைகளின் பேரில் தபால் நிலையத்தில் மாதம் தோறும் சேமிப்பு செய்து வருகிறார் என்றாலும் சரியல்ல. நான் தற்பொழுது நாள் ஒன்றுக்கு ரூபாய் 600/- கார்மன்ஸ் கம்பெனியில் சம்பளம் வாங்கி வருகிறேன் என்றாலும் அதனை வைத்து என்னை நானே பராமரித்து கொள்ள போதுமான பணம் என்றாலும் எதிர்மனுதாரரின் சொற்ப வருமானத்தில் அவரது பிள்ளைகளையும் பெற்றோர்களையும் பார்த்து வருகிறார் என்றாலும் அதனால் எதிர்மனுதாரரிடம் எந்த ஜீவானசமும் பெற சட்டப்படி எனது தகுதி இல்லை என்றால் சரியல்ல. மேற்படி முத்துக்குமார்

என்பவரின் அலைப்பேசி எண் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடன் அலைப்பேசி எண் தெரியாது. என்னுடைய அலைப்பேசி எண் 9655717443 என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி முத்துக்குமாரின் அலைப்பேசி எண் 9787394890 என்றால் தெரியாது. தற்பொழுது நான் அலைப்பேசி பயன்படுத்தவில்லை. நான் வேறொரு நபருடன் திருமணத்தின்மீறிய தொடர்பில் உள்ளதால் எதிர்மனுதாரரிடமிருந்து ஜீவனாம்சம் பெற எனக்கு சட்டப்படி எந்த தகுதியும் இல்லை என்றால் சரியல்ல. இந்த மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2025.06.12 03:06:29 +0530